**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி, திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி, எம்.எல்.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் நாள் புதன்கிழமை**

**(திருவள்ளுவராண்டு 2056 பராபவ வருடம் சித்திரை மாதம் 02 ஆம் நாள்)**

**அ.வ.எண் : 258/2024**

**[CNR No : TNDG07 - 000898 – 2024]**

**பாரத ஸ்டேட் வங்கி, பழனி (Main) கிளை,**
**அதன் மேலாளர் மூலம் --- வாதி**

**எதிர்**

**K. ராஜேந்திரன் --- பிரதிவாதி**

**இந்த வழக்கானது 26.11.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 06.04.2026 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் P. மகேந்திரன் மற்றும் B. மனோகரன் ஆகியோர் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக இருந்தும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,**

**தீர்ப்புரை**

**வாதி வங்கிக்கு மேற்படி கடன் தொகை ரூ.1,59,495/–ம் அதற்கு வழக்கு தாக்கல் செய்த தேதி முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை 9.05 சதவீதம் பின்வட்டியுடன் சேர்த்து பிரதிவாதியை செலுத்திவைக்க உத்தரவிடக்கோரியும், இவ்வழக்கின் செலவுத் தொகையை வாதி வங்கிக்கு, பிரதிவாதியை செலுத்திவைக்கக் கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

**2. வாதி தரப்பில் தாக்கல் செய்யபட்ட வழக்குரையின் சுருக்கம்–**

2.1. பிரதிவாதி கால்நடைகள் வளர்க்கும் தொழில் செய்து வருவதில், சொந்தமாக மாட்டுக் கொட்டகை கட்டும் பொருட்டு ரூ.1,75,000/– கடன் கேட்டு வாதி வங்கியில் கடந்த 13.11.2019 அன்று மனு கொடுத்திருந்ததில், மேற்படி மனு வாதி வங்கியால் பரிசீலனை செய்யப்பட்டு, அதன்படி கணக்கு எண்.CCA/c.39091593618–ல் கடந்த 23.01.2020 அன்று கடன் தொகை ரூ.1,75,000/–ஐ வாதி வங்கியிலிருந்து கடன் பெற்றுக்கொண்டு அதற்கு 10.75 சதவீதம் வட்டி செலுத்திவைப்பதாகவும், மேற்படி தொழில் முதலீட்டுக் கடனை உரிய வட்டியுடன் சேர்த்து தவணை முறையில் மாதந்தோறும் உரிய தவணை காலம் வரை தவறாமல் செலுத்திவைப்பதாகவும், மேலும் மேற்படி வட்டி விகிதத்தில் பின்னார் ஏற்படும் மாற்றங்களுக்கு கட்டுப்படுவதாகவும், கடன் நிபந்தனைகளுக்கும், வாதி வங்கியின் சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்படுவதாகவும் ஒப்புக்கொண்டு அதற்கு ஆதரவாக வாதி வங்கிக்கு, பிரதிவாதி 23.01.2020 அன்று ஒரு கொதுவை ஒப்பந்தப் பத்திரமும், Letter of Arrangement ஆவணமும் எழுதிக்கொடுத்துள்ளார். மேலும் பிரதிவாதி, வாதி வங்கி கடனை ஒப்புக்கொண்டு கடந்த 27.12.2022 அன்று உயிர்ப்புக் கடிதம் எழுதிக்கொடுத்துள்ளார். பிரதிவாதி, வாதி வங்கியில் பெற்றுள்ள கடன் தொகையில் பலன்களை முழுமையாக அடைந்துகொண்டு ஒப்புக்கொண்டுள்ளபடி மேற்படி கடன் தொகையை முறையாக வாதி வங்கிக்கு செலுத்தி வைக்காமல் இருந்து வருகிறார். மேற்படி கடன் தொகையை திருப்பிச் செலுத்திவைக்கும்படி வாதி வங்கியின் அதிகாரிகள் பிரதிவாதியை பலமுறை நேரில் துயர்ந்தும் பிரதிவாதி மேற்படி கடன் தொகையை வாதி வங்கிக்கு செலுத்திவைக்கவில்லை. எனவே பிரதிவாதியின் கணக்கு ஒழுங்கற்ற கணக்கு என்றும், ஆதாயம் தராத கணக்கு என்றும் கருத்தில்கொள்ளப்பட்டது. எனவே பண வசூலுக்காக வாதியால் இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதுபோல் பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராக இருந்து வருகிறார்.

**4. இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் விவரம் :–**

இவ்வழக்கில் வாதி வங்கி தரப்பில் வாதி வங்கியின் துணை மேலாளர்

திரு. எழில்ராஜ் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சி விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், வாதி வங்கி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

<u>6. வாதி தரப்பு வாத சுருக்கம் :–</u>

6.1. வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், பிரதிவாதி கால்நடைகள் வளர்க்கும் தொழில் செய்து வருவதில், சொந்தமாக மாட்டுக் கொட்டகை கட்டும் பொருட்டு ரூ.1,75,000/– கடன் கேட்டு வாதி வங்கியில் கடந்த 13.11.2019 அன்று கொடுத்த மனுவின்பேரில், கடந்த 23.01.2020 அன்று கடன் தொகை ரூ.1,75,000/–ஐ வாதி வங்கியிலிருந்து கடன் பெற்றுக்கொண்டு அதற்கு 10.75 சதவீதம் வட்டி செலுத்திவைப்பதாகவும், மேற்படி தொழில் முதலீட்டுக் கடனை உரிய வட்டியுடன் சேர்த்து தவணை முறையில் மாதந்தோறும் உரிய தவணை காலம் வரை தவறாமல் செலுத்திவைப்பதாகவும் ஒப்புக்கொண்டு அதற்கு ஆதரவாக வாதி வங்கிக்கு, பிரதிவாதி 23.01.2020 அன்று ஒரு கொதுவை ஒப்பந்தப் பத்திரமும், Letter of Arrangement ஆவணமும் மற்றும் பிரதிவாதி, வாதி வங்கி கடனை ஒப்புக்கொண்டு கடந்த 27.12.2022 அன்று உயிர்ப்புக் கடிதமும் எழுதிக்கொடுத்துள்ளார். பிரதிவாதி, வாதி வங்கியில் பெற்றுள்ள கடன் தொகையில் பலன்களை முழுமையாக அடைந்துகொண்டு ஒப்புக்கொண்டுள்ளபடி மேற்படி கடன் தொகையை முறையாக வாதி வங்கிக்கு செலுத்தி வைக்காமல் இருந்து வருகிறார். எனவே பிரதிவாதி வாதி வாதி வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ.1,59,495/–க்கு தாவா தாக்கல் செய்த தேதி முதல் தொகை முழுவதும் வசூலாகும் வரை 9.05 சதவீதம் பின்வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் பிரதிவாதி செலுத்தக்கோரி, வாதி தரப்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.2. வாதி வங்கி தரப்பில் வாதி வங்கியின் துணை மேலாளர் திரு. எழில்ராஜ் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி கடன்

தொகையை திருப்பிச் செலுத்துமாறு அனுப்பிய எழுத்துப்பூர்வ கோரிக்கைக்கு பிரதிவாதி தரப்பில் எந்தவிதமான பதில் மற்றும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. வாதியின் வழக்கினை பொய்ப்பிக்கக் கூடிய வகையில், பிரதிவாதியை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராகியுள்ளார்.

6.3. பிரதிவாதி வாதியின் வழக்கை பொய்பிக்கும் வகையில் எந்த ஒரு வாய்மொழி சாட்சிய மற்றும் சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தி தன் தரப்பில் எவ்வித எதிர்ப்பினையும் நிரூபிக்க முன்வரவில்லை. வாதியின் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மறுக்கப்படக்கூடியதாக இல்லை என்ற காரணத்தின் அடிப்படையில் வாதியின் வழக்கு உண்மை என்பது இந்நீதிமன்றம் முன்பு நிரூபிக்கப்பட்டுள்ளதால், பிரதிவாதி, வாதி வங்கியிடம் பெற்ற கடன் தொகையை திரும்ப செலுத்தக் கடமைப்பட்டவர் என்ற அடிப்படையில் வாதி வங்கி கோரிய பரிகாரம் வழங்கத்தக்கது என முடிவு கண்டு வாதி வங்கிக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்க வேண்டி வாதிட்டார்.

<u>7. தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனைக்கான பதில் :–</u>

7.1. வாதியின் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வழக்குரை, சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் வாதுரை கருத்தில் கொள்ளப்பட்டது. பிரதிவாதி வாதி வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ.1,59,495/–க்கு தாவா தாக்கல் செய்த தேதி முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை 9.05 சதவீத வட்டி மற்றும் பின்வட்டி செலவுத் தொகையுடன் பிரதிவாதி செலுத்தக்கோரி, வாதி வங்கி தரப்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7.2. வாதி வங்கி தனது வழக்கை நிரூபிக்கும் வகையில் வாதி வங்கியின் துணை மேலாளர் திரு. எழில்ராஜ் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆன கடன் விண்ணப்பம், வா.சா.ஆ.2 ஆன கொதுவை ஒப்பந்தம் மற்றும் வா.சா.ஆ.3 ஆன Letter of arrangement ஆவணம் ஆகியவற்றைப் பரிசீலிக்கையில், வாதி வங்கியிடம், பிரதிவாதி கடந்த 13.11.2019 அன்று கால்நடைகள் வளர்க்கும் தொழில்

செய்து வருவதில் சொந்தமாக மாட்டுக்கொட்டகை கட்டுவதற்கு ரூ.1,75,000/−ஐ மனு செய்ததில், மேற்படி மனு பரிசீலிக்கப்பட்டு 23.01.2020 அன்று மேற்படி கடன் தொகையை பெற்றுக்கொண்டு, அதற்கு 10.75 சதவீதம் வட்டி செலுத்திவைப்பதாகவும், உரிய வட்டியுடன் சேர்த்து தவணை முறையில் மாதந்தோறும் உரிய தவணை காலம் வரை தவறாமல் செலுத்திவைப்பதாகவும் ஒப்புக்கொண்டு 23.01.2020 அன்று ஒரு கொதுவை ஒப்பந்தமும், Letter of Arrangement ஆவணமும் எழுதிக்கொடுத்துள்ளார் என்பது அறிய முடிகிறது. மேலும் வா.சா.ஆ.4 ஆவணத்தைப் பரிசீலித்ததில், பிரதிவாதி, வாதி வங்கியின் கடனை ஒப்புக்கொண்டு கடந்த 27.12.2022 அன்று ஒரு உயிர்ப்புக் கடிதம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது. பிரதிவாதியின் கடன் சம்மந்தப்பட்ட வங்கிக் கணக்கு நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன அனைத்து ஆவணங்களையும் நன்கு பரிசீலனை செய்ததில், பிரதிவாதி, வாதி வங்கிடம் கடந்த 23.01.2020 ஆம் தேதி ரூ.1,75,000/−ஐ கடனாகப் பெற்றுள்ளார் என்பதை இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

7.3. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சிய, சான்றாவணங்கள் இந்திய சாட்சிய சட்டத்தில் சொல்லப்பட்ட சட்ட வரையரைக்கு உட்பட்டு ஏற்புடையதாக அமைந்துள்ளது. வாதியின் எழுத்துப் பூர்வ கோரிக்கையை எதிர்த்து அதை பொய்ப்பிக்கும் வகையில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாமல், பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தோன்றாத் தரப்பினராகி உள்ளார்.

7.4. பிரதிவாதி வாதி வங்கியின் வழக்கை மறுத்து வாதி வங்கிக்கு எதிராக எந்த ஒரு சாட்சிய சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தி பிரதிவாதி நீதிமன்றத்தின் முன்பு நிரூபிக்க முன்வரவில்லை. வாதி வங்கியின் வழக்கை பொய்பிக்கும் வகையில் பிரதிவாதி எந்த ஒரு சட்ட நடவடிக்கை மற்றும் எதிர்ப்பை தெரிவிக்காத காரணத்தினால், வாதி வங்கி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சாட்சிய சான்றாவணங்கள் மறுக்கபடக்கூடியதாகவோ அல்லது ஏற்றுக் கொள்ளக்கூடாததாகவோ இல்லை என்ற காரணத்தின் அடிப்படையில் பிரதிவாதி பெற்ற கடனை ஒப்புக் கொண்டுள்ளார் என்பதாகவே இந்த நீதிமன்றம் கருதுகிறது.

7.5. வாதி வங்கியின் வழக்கின் பொருண்மைக்கு எதிராக யாதொரு வாதத்தினையும் பிரதிவாதி முன்வைத்து நிரூபிக்க முன்வரவில்லை. இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வாய்மொழி சாட்சியம் மற்றும் சமர்பிக்கப்பட்டுள்ள அசல் ஆவணங்களின் உண்மை தன்மையினை பிரதிவாதி பொய்ப்பிக்கத் தவறியுள்ள காரணத்தின் அடிப்படையில் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 114(g)–ன் அனுமானம் வாதி வங்கிக்கு ஏற்புடையதாக கருதுவதன் அடிப்படையில் பிரதிவாதி, வாதி வங்கியிடம் பெற்ற கடன் தொகையை திரும்ப செலுத்தக் கடமைப்பட்டவர் என்பதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியாக வாதி வங்கிக்கு, பிரதிவாதி தாவாத் தொகை ரூ.1,59,495/–மும், மேற்படி தொகைக்கு தாவாத் தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை ஆண்டொன்றுக்கு 9 சதவீத வட்டியும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை ஆண்டொன்றுக்கு 6 சதவீத பின்வட்டியையும் சேர்த்து செலுத்திவைக்கவேண்டுமென்றும், இவ்வழக்கின் செலவு தொகையை வாதி வங்கிக்கு பிரதிவாதி செலுத்திவைக்கவேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் தீர்ப்பு அவையறிய பகரப்பட்டது.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2026.04.15 18:14:25 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

| **வாதி தரப்பு சாட்சி–** | | |
|---|---|---|
| **வரிசை எண்.** | | **சாட்சியின் பெயர்** |
| வா.சா.1 | : | திரு. எழில்ராஜ் – (வாதி வங்கியின் துணை மேலாளர்) |

| **வாதி தரப்பு சான்றாவணங்கள்–** | | | |
|---|---|---|---|
| **வரிசை எண்** | **நாள்** | **ஆவணப்பெயர்** | **ஆவணத் தன்மை** |
| வா.சா.ஆ.1. | 13.11.2019 | வாதி வங்கியிடம் கடன் கேட்டு பிரதிவாதியால் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள கடன் விண்ணப்பம் | அசல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.2. | 23.01.2020 | பிரதிவாதி, வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்துள்ள கொதுவை ஒப்பந்தம் | அசல் |
| வா.சா.ஆ.3. | 23.01.2020 | பிரதிவாதி, வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்துள்ள Letter of Arrangement ஆவணம் | அசல் |
| வா.சா.ஆ.4. | 27.12.2022 | பிரதிவாதி, வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்துள்ள உயிர்ப்புக் கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.5. | --- | CCA/c No.39091593618 சம்மந்தப்பட்ட வாதி வங்கியின் கணக்கு நகல் | உண்மை நகல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–** இல்லை

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2026.04.15 18:14:31 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**